Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# தமிழக கோயில்கள் கட்டடக்கலை

# மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயில்

[1]sandhiya soundararajan ,[2] Dr. Sumathi ph.d.,
[3] Dr.saratha ph.d
Bridge Academy.

54

**ஆய்வுச் சுருக்கம்:**

தமிழக இந்து சமயத்திற்கு உரிய வழிபாடு இடமான இந்து கோயில்களை தமிழக கட்டிடக்கலையாகும். தமிழ் கோயில்களில் பல கட்டிடக்கலைகள் இருந்தாலும் அவை யாவிற்கும் ஒற்றுமை காணப்படுகின்றது. அக்கோயில்களில் கர்ப்பகிரகம், கருவறை அர்த்தமண்டபம், கலசம் முதலியவை தமிழகக் கோயில்கள் பொதுவான அம்சங்களாக விளங்குகின்றது. தமிழ் கோயில்களில் உள்ள கட்டிடக்கலையானது மிகவும் தொன்மை மற்றும் பழமை வாய்ந்த சமய கருதப்படுகின்றன. இதன் அடிப்படையாக கருதப்படும் வேதங்கள் கி.மு 1500கும் முன்னரே தோன்றியிருக்கும் இன்று வரை நிலைத்து நிற்கின்றன. இது கோயில்கள் கட்டடப்பட்ட காலத்திற்கு பிற்பட்டவை இப்படிப்பட்ட மிகவும் பழமை வாய்ந்த தமிழக கோயில்களின் கட்டிடக்கலையில் ஒன்றான மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் பற்றிய இங்கு நோக்கலாம்.

**முன்னுரை:**

மிகவும் பழமையான காலகட்டத்திலேயே நமது நாட்டில் கோயில்களின் கட்டிடங்கள் மரத்தினால் அமைக்கப்பட்டன. அதன் பிறகு செங்கல் சுண்ணாம்பு மரம் முதலிய பொருள்களால் கட்டடங்கள் அமைக்கப்பட்டன . கடைசியாக தனித்தனி கருங்கற்களை கொண்டு கற்றளிகள் அமைக்கப்பட்டன. கருங்கற்களை ஒன்றின் மேல் ஒன்றாக அடக்கி கட்டப்படுவது கற்றளி எனப்படும். வெறும் மண்ணால் கட்டப்பட்ட கோயில்கள் மந்தளி எனப்படுகிறது.

**மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் அமைப்பு**:

உலகிலேயே மிகப்பெரிய கோயில் ஆக கருதப்படும் இக்கோவில் 17 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தின் நீளம் 847 அடி அகலம் 792 அடி. ஆடி வீதியில் அமைந்துள்ள பிரகார சுவர் கிழக்கு மேற்காக 850 அடியிலும் வடக்குக் கிழக்காக 730 அடியிலும் அமைந்துள்ளது. மதுரை மாநகரின் நடுவே கோவில் அமைந்துள்ளது வெகு சிறப்பு. மேலும் இதன் சிறப்புகளில் முக்கியமாக விளங்குவது கோபுரங்களும் தங்கத்தாலான கோபுரங்கள் இரண்டும் அல்லாது 14 கோபுரங்கள் உள்ளன. இவற்றில் நான்கு வெளிக்கு கோபுரங்கள் அமைந்துள்ளது. இவை அனைத்தும் ஒன்பது நிலைகள் கொண்டவை மிகப் பிரம்மாண்டமான உயர்ந்து நின்று

கோயிலுக்கும் மதுரைக்கும் அழகும் பெருமையும் சேர்த்து வருகின்றன. இந்த நான்கு கோபுரங்களும் ராஜ கோபுரங்கள் என அழைக்கப்படுகின்றன. இவை நான்கு திசைகளிலும் அமைந்துள்ளது. ஏழ அடுக்கு கோபுரம் சித்திரை கோபுரம் என அழைக்கப்படுகிறது. இது அம்மன் சன்னதி கோபுரமாகும். ஐந்து அடுக்குகளை கொண்ட ஐந்து கோபுரங்கள் உள்ளன. அவை நாயகி கோபுரம் அல்லது சுவாமி சன்னதி கோபுரம், முக்குறுதி விநாயகர் கோபுரம் அல்லது நடுக்காட்டு அல்லது இடைக்காட்டு கோபுரம், சின்ன மொட்டை கோபுரம், மரகோபுரம், கஜ கோபுரம் ஆகும் . மூன்று அடுக்குகளைக் கொண்ட இரண்டு கோபுரங்களும் உள்ளன. அவை அம்மன் சன்னதி, சுவாமி சன்னதிகள் உள்ளன. இரண்டு தங்க கோபுரங்கள் உள்ளன. இவை அம்மன் சுவாமி சன்னதியில் உள்ளன இதனை இந்திர விமானம் என்றும் கூறுவர் மீனாட்சிக்கு நான்கு சொக்கநாதருக்கு நான்கு சுற்றுசுவரில் நான்கு எனக்கோயிலில் 12 கோபுரங்கள் உள்ளன. வெளி சுற்றுச்சூழல் இருக்கும் வியப்பூட்டம் கோபுரங்களில் மதுரையின் சிறப்பு. மிகவும் பழமையானதாகவும் கருதப்படுவது கிழக்கு கோபுரமே ஆகும். 13 ஆம் நூற்றாண்டு ஆரம்ப காலங்களில் மாறவர் மண் சுந்தரபாண்டியன் மன்னனால் கட்டப்பட்டது. 153.3 அடி உயரத்துடன் காட்சியளிக்கிறது இக்கோபுரம் இதன் அடிபாகம் 111.3 அடி நீளமும் 65.6 அடி அகலமும் உடையது. கோபுரத்தில் நம் புராண கதைகளை வெளிப்படுத்தும் விதமாக நம் பண்பாடு கலாச்சாரங்களை பிரதிபலிக்கும் விதமாக அழகிய அற்புத 1011 சிற்ப சிலை வடிவங்கள் அமைக்க பெற்று நம்மை ஈர்த்து மயங்குகின்றன.

**மேற்கு கோபுரம்:**

மேற்கு கோபுரம் 1323 ஆம் ஆண்டு பராக்கிரம பாண்டிய மன்னனால் கட்டப்பட்டது என்று தெரிய வருகிறது. இது 154.6 அடி உயரம் கொண்டதாக விளங்குகின்றது. இதன் அடிப்பாகத்தின் நீளம் 101 அடி அகலம் 63.06 அடி. இதில் கலையம்சம் நிறைந்த 1124 சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன ஒன்பது தலங்கள் கொண்டவை. தெற்கு கோபுரம் திருச்சியை சேர்ந்த ஸ்ரீ ராம மலை செவ்வந்தி செட்டியாரால் 1559 ஆம் ஆண்டு திருப்பணி செய்யப்பட்டது. இதன் உயரம் 160.9 அடி இதன் 168 அடி 67 அடி அகலம் கொண்டது. நான்கு வெளி கோபுரங்களில் மிகவும் உயரமானது இதுவே என்பது குறிப்பிடத்தக்கது. நம் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் விதமாக 1511 அழகிய புராதான சிற்பங்களை கோபுரத்தில் அமைந்து அழகு சேர்க்கின்றது. எந்த கோபுரத்தின் மீது மட்டுமே நம்மால் ஏறி பார்க்க முடியும் என்பது தனி சிறப்பு பார்த்தால் மற்ற எல்லா கோபுரங்களையும் இரண்டு விமானங்களையும் மிகத் தெளிவாக காண முடிகின்றது. வடக்கு கோபுரம் 1878 ஆம் ஆண்டு பூர்த்தி நிலையை அடைந்தது. முதலாம் கிருஷ்ண வீரப்ப நாயக்க மன்னரால் 1570 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு இதன் பணிகள் அமராவதி புதூர் வயிநாகபுரம் நாகப்ப செட்டியார் குடும்பத்தினால் முடிக்கப்பட்டது என கூறப்படுகின்றது. இந்த கோபுரம் முழுமை அடையாத நிலையிலேயே இருந்து வருகின்றது. இதன் காரணமாக இதனை மொட்டை கோபுரம் என்று அப்பகுதி மக்கள் அழைக்கின்றனர். இக்கோபுரம் 152 அடி உயரம் இதன் அடிப்பாகம் 111.6 அடி நீளமும் 66.6 அடி

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

அகலமும் கொண்டதாக அமைந்துள்ளது. இக்கோபுரத்தில் அழகிய வேலைப்பாடுகள் மிக்க 404 சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனை தவிர்த்து ஏழு நிலைகள் கொண்ட சித்திரை கோபுரம் ஒன்றும் உள்ளது. மேலும் ஐந்து நிலைகள் கொண்ட ஐந்து கோபுரங்களும் மூன்று நிலைகள் கொண்ட இரண்டு கோபுரங்களும் இரண்டு தங்க கோபுரங்களும் இந்த ஆலயத்தில் கம்பீரமாக காட்சியளிக்கின்றது.

**கிழக்கு ராஜகோபுரம்:**

புது மண்டபத்திற்கு கிழக்கில் அமைந்துள்ள ராஜகோபுரம் இது கட்டி முடிக்கப்படாத நிலையிலேயே தற்போதும் அமைந்துள்ளது. திருமலை நாயக்க மன்னரால் கட்டப்பட்டதாகவும் இதன் கீழ் பகுதி பூமிக்குள் புதைந்து விட்டதாகவும் கூறப்படுகின்றது. இந்த ராஜகோபுரம் 174 அடி நீளமும் 107 அடி அகலமும் உடையது. இதன் நுழைவாயில் 22 அடி உயரம் 163.3 ஒரே கல்லினால் ஆன தூண்கள் கிட்டத்தட்ட 30 மீட்டர்கள் உள்ளன திருமலை நாயக்கரால் ஆரம்பிக்கப்பட்டு பணி முடிவடையும் முன்பே இவர் காலமானார். இது 9 தளங்களைக் கொண்டுள்ளது 1011 சிற்பங்களை கொண்டுள்ளது. இங்கு சுவாமி சன்னதியில் மட்டும் ஐந்து கோபுரங்கள் அமைந்துள்ளன சுவாமி புண்ணிய கோபுரம் மூன்று நிலை கொண்டது கிபி 1168 முதல் கிபி 1175 வரை மதுரையை ஆண்ட குலசேகர பாண்டிய மன்னரால் கட்டப்பட்டது. இந்த கோபுரம் சுவாமி சன்னதிக்கு செல்லும்போது முகப்பில் இந்த கோபுரம் அமைய பெற்றுள்ளது. மீனாட்சியம்மன் ஆலயத்தில் அமைந்துள்ள அனைத்து கோபுரங்களும் மிகவும் பழமையானதே ஆகும்.

**சுவாமி சன்னதி கோபுரம்:**

அடுத்து 5 நிலைகள் கொண்ட சுவாமி சன்னதி கோபுரம் வாசு வெப்பம் என்பவரால் 1372 ஆம் ஆண்டில் இக்கோபுரம் அமைக்கப்பட்டது. சுவாமி சன்னதியில் கொடி மரத்திற்கும் திருக்கல்யாண மண்டபத்திற்கும் இடையே இந்த கோபுரம் அமைந்துள்ளது இதன் உயரம் 66 அடி இதன் அடிபாகத்தில் நீளம் 42 அடி அகலம் 32 அடி கோபுரத்தில் 250 அழகிய சிலைகள் அமைந்துள்ளது. முக்குருணி விநாயகர் கோபுரம் அல்லது நடுக்காட்டு கோபுரம் என்று அழைக்கப்படும் கோபுரம் ஐந்து நிலைகளை உடையது. விராமலை செவ்வந்தி மூர்த்தி செட்டியாரால் 1559 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. அம்மன் சன்னதிக்கும் சுவாமி சன்னதிக்கும் செல்லும் வழி பாதையில் அமைந்துள்ள முக்குருளி விநாயகர் சன்னதியின் மேல்பாகத்தில் கோபுரம் அமைந்துள்ளது. 69 அடி உயரம் கொண்ட இதன் அடித்தளம் நீ ளம் நாடி அகலம் 33 அடி கோபுரத்தில் 112 அழகிய சிற்பங்கள் அமைந்துள்ளது. அடுத்ததாக சுவாமி சன்னதிக்கு மேல் கோபுரம் 1374 ஆம் ஆண்டு மாளப்பன் என்பவரால் கட்டப்பட்டது. சுவாமி சன்னதிக்கு மேற்கு புறம் கடைசியில் அமைந்துள்ள இது ஐந்து நிலைகள் உடையது 72 அடி உயரம் உடைய கோபுரத்தின் அடித்தளத்தின் நீளம் 42 அடி அகலம் 31 அடி கோபுரத்தில் அமைந்துள்ள கண்களை கவரும் சிற்பங்கள் 340 என்று

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

தெரியவருகின்றன. கடைசியாக சுவாமி சன்னதி வடக்கு கோபுரம் அல்லது சின்ன மொட்டை கோபுரம் விபரங்கள் செவ்வந்தி வேலப்ப செட்டியாரால் 1560 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது. இந்த கோபுரம் சுவாமி சன்னதியின் வடக்கே கல்யாண சுந்தரேஸ்வரர் சன்னதிக்கு அருகாமையில் அமைந்துள்ளது. கோபுரம் ஐந்து நிலைகள் கொண்டது இதில் 184 சிற்பங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. அம்மன் சன்னதியில் அமைந்துள்ள கோபுரங்கள் மீது ஒரு சிறிய உலா. அம்மன் சன்னதியில் மூன்று கோபுரங்கள் மூன்று நிலைகள் உடையது அம்மன் சன்னதி கோபுரம் ஆனந்த தாண்டவம் நம்பி என்பவரால் 1227 மற்றும் 1228 ஆம் ஆண்டுகளில் இந்த கோபுரம் கட்டப்பட்டதாக சரித்திர சான்றுகள் பகிர்கின்றன. அம்மன் சன்னதியின் நுழைவு வாயிலின் மேற்கு புறத்தில் கிளிக்கூண்டு மண்டபத்தின் மேற்கு கோடியில் இந்த கோபுரம் கம்பீரமாக எழுந்து காட்சி தருகின்றது. அம்மன் சன்னதிக்கு மேல் கோபுரம் 1570 ஆம் ஆண்டில் வீரத்து மாசி என்பவரால் நிர்மாணிக்கப்பட்டது. ஐந்து நிலைகள் உடையது சன்னதியின் முதல் பிரகாரத்தில் மேற்கு மூலையில் இது உயர்ந்து நிற்கின்றது. இதன் உயரம் 64.6 அடி மற்றும் அடிப்பகுதி 50 அடி நீளமும் 28 அடி அகலம் கொண்டதாக அமைந்துள்ளது. 228 புராதன சிற்பங்களை கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. மூன்றாவது சித்திரை கோபுரம் என்று அழைக்கப்படும் இது ஏழு நிலைகள் கொண்டது 1569 ஆண்டுகளில் காலத்திய முதலியார் அவர்களால் கட்டப்பட்டது. மீனாட்சி நாயக்கர் மண்டபத்திற்கும் முத்துப்பிள்ளை மண்டபத்திற்கும் இடையே கோபுரம் அமைந்து பக்தர்களை பரவசத்தில் ஆழ்த்தி வருகின்றது உயரமானது. கலைநயத்தில் உன்னதமானதும் கோபுரமே இதில் 730 அழகிய சின்னஞ்சிறிய சிலைகள் அமைக்க பெற்றிருக்கின்றது. இந்த கோபுரங்களை தவிர மேலும் இரண்டு கோபுரங்கள் இந்த ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இரண்டும் தங்கு தகடுகளால் செய்யப்பட்ட அழகிய அம்சம் பொருந்திய கோபுரங்கள் ஆகும். ஒன்று சுவாமி சன்னதிலும் மற்றொன்று அம்மன் சன்னதையும் காணமுடிகின்றது சுவாமி சன்னதி தங்க கோபுரத்தை இந்திர விமானம் அல்லது அஷ்டகஜ விமானம் என்று அழைக்கப்படுகின்றது. இதற்காக தங்கம் தகடுகளை 1559 முதல் 1563 ஆம் ஆண்டுகளில் அன்பளித்தவர் விஸ்வநாத நாயக்கர். கோபுரத்தில் 8 யானைகள் 32 சிற்பங்கள் மற்றும் 64 சினை முனிவர்கள் சிற்பங்கள் அழகுடன் அமைக்கப்பட்டுள்ளது. அம்மன் சன்னதியில் அமைந்துள்ள தங்க கோபுரத்தை சித்திரை கோபுரம் என்றும் அழைக்கின்றனர். 1559 ஆம் ஆண்டு சிரமலை செவ்வந்தி மூர்த்தி செட்டியாரால் கோபுரம் நிர்மாணிக்கப்பட்டது. 177 அடி உயரத்தில் ஆன இந்த அடி பாகம் 78 அடி நீளம் 32 அடி அகலமாக கொண்டது. இந்த கோபுரத்தில் 730 சிற்பங்கள் அமைந்துள்ளது .மேலும் பிராகாரத்தின் இரண்டாம் நிலையில் அஷ்ட சக்தி மண்டபம் மீனாட்சி நாயக்கர் மண்டபம் ஆடி வீதி உள் கோயில் பிரகாரம் சித்த கோபுரம் முதலிய மண்டபம் காணப்படுகின்றது. மேற்கண்ட தரவுகளின் மூலம் வெள்ளியம்பலம் திருத்தலத்தின் அமைப்புகளை அறிந்து கொள்ள முடிகின்றது.

**முடிவுரை:**



அண்ணா பல்கலைக்கழகம், சென்னை
(பொறியியல் தொழில்நுட்ப தமிழ் வளர்ச்சி மையம்,
கட்டிடக்கலைத்துறை & கட்டுமானத்துறை)
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
(கட்டடக்கலைத்துறை) மற்றும்
பிரணவ் நுண்கலை ஆய்விதழ்
இணைந்து நடத்திய பன்னாட்டுக் கருத்தரங்கம்
' தமிழரின் கட்டடக்கலை தொழில்நுட்பம் "
Special Issue - Volume -2 Issue -2

நமது தமிழக கோயில்களில் உள்ள கட்டடக்கலையானது பலரையும் ஈர்க்கும் விதமான கட்டிடக்கலையாக கொண்டுள்ளது. இது மிகவும் தொன்மையான காலத்தில் தோன்றியது மட்டுமின்றி காலத்தை தாண்டியே வடிவமைப்புகளை கொண்டுள்ளது. கலை உணர்விற்கு மன்னர்களால் பழங்காலத்தில் கட்டப்பட்ட கோயில்கள் ஒரு உயிர் துடிப்போடும் விளங்குவதாக தமிழக கோயில்களில் கட்டிடக்கலையானது உள்ளது என்பதையும் அதன் முக்கியத்துவமும் அதன் அழகையும் ரசிக்க நம் தமிழர்களான ஒவ்வொருவருக்கும் பெருமையை ஆகும்.

துணை நின்று நூல்கள்:

1. மாநகர் மதுரை அன்றும் இன்றும் பக். எண்- 7, 39-46, 53.

2 .மதுரை மீனாட்சி அம்மன் தல வரலாறு.